**சுருக்கம்**

பொதுப்பணிகள் – 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் – மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் தீர்ப்பினை செயல்படுத்தும் பொருட்டு வெளியிடப்பட்ட வழிகாட்டுநெறிமுறைகள் – திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

---

மனிதவள மேலாண்மை (எஸ்) துறை

அரசாணை (நிலை) எண். 16 நாள்: 15.04.2025

விசுவாவசு, சித்திரை, 2,

திருவள்ளுவர் ஆண்டு, 2056.

படிக்கவும்:

1. 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம்.
2. அரசாணை (நிலை) எண்.145, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.09.2010.
3. அரசாணை (நிலை) எண்.40, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள் 30.04.2014.
4. 2020-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டம்.
5. நீதிப்பேராணை மனு (MD) எண்.8025 / 2020-ல் 22.03.2021 அன்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையால் வழங்கப்பட்ட தீர்ப்பு.
6. அரசாணை (நிலை) எண்.82, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள்: 16.08.2021
7. அரசாணை (நிலை) எண்.1, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள்: 02.01.2024.
8. நீதிப்பேராணை மனு எண்கள்.4129 மற்றும் 22818 / 2022-ல் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய 11.03.2024-ம் நாளிட்ட தீர்ப்பு

******

ஆணை:

மேலே ஆறு மற்றும் ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டன.

2. இப்பொருண்மை தொடர்பாக பல்வேறு வகைகளைச் சேர்ந்த மனுதாரர்களால் [நிலவொளிப் பள்ளிகளில் பயின்றவர்கள், நேரடியாக 2, 3, 4 அல்லது 5-ஆம் வகுப்புகளில் சேர்ந்து பள்ளிகளில் தொடர்ந்து பயின்று தேர்ச்சி பெற்றவர்கள், குடும்பச் சூழ்நிலை, வறுமை காரணமாக படிப்பினைத் தொடர முடியாமல் நேரடியாக 8-ஆம் வகுப்பு, 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்புகளை தனித்தேர்வர்களாக தேர்வெழுதி தேர்ச்சி பெற்றவர்கள்] தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களுக்கு வழங்கப்படும் ஒதுக்கீட்டிற்கு தங்களையும் தகுதியுடையவர்கள் என ஆணை வெளியிடுமாறு கோரி பல்வேறு கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன.

3. இந்நிலையில், மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட வழக்கு எண்கள் W.P.Nos.4129 மற்றும் 22818/2022-ல் சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய 11.03.2024-ஆம் நாளிட்ட தீர்ப்பில், நேரடியாக மூன்றாம் வகுப்பில் சேர்ந்து தொடர்ந்து பயின்று தேர்ச்சி பெற்றவரை முதன்மை தேர்வுக்கு அனுமதிக்குமாறும், நிலவொளிப் பள்ளியில் பயின்றவருக்கு தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களுக்கான முன்னுரிமை அளிக்க சிறப்பு நிகழ்வாகக் கருதலாம் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மேற்படி தீர்ப்பின் பத்தி 13-ல் பின்வருமாறு ஆணையிடப்பட்டுள்ளது:

> "13. In view of the above, the Government Order in G.O.Ms.No.82, Human Resources Management (S) Department, dated 16.08.2021 on the file of the 1st Respondent insofar as clause 4(iii) "only those who studied their entire education through out in Tamil medium viz, right from 1$^{st}$ standard upto prescribed qualification" is modified as "only those persons who have completed their entire education right from their schooling up to the qualification prescribed in the relevant service rules".

4. மேற்கண்ட நீதிமன்ற ஆணையின் அடிப்படையிலும், பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளின் அடிப்படையிலும், அரசு கவனமாக ஆய்வு செய்து, தமிழ்நாடு அரசுப் பணிநியமனங்களில், நேரடி நியமனத்திற்கான காலிப்பணியிடங்களில், இருபது விழுக்காடு (20%) பணியிடங்களை தமிழ்வழியில் கல்வி பயின்றவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கீடு செய்வது குறித்து வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண். 82-ல், பத்தி 4-இல் (i) முதல் (xi) வரை உள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்குப் பதிலாக பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளை மாற்றியமைத்து ஆணையிடுகிறது:-

(i) ஒன்றாம் வகுப்பு முதல், தொடர்புடைய பணி விதிகளில் நேரடி நியமன முறைக்கென வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி வரையில் முழுவதுமாக தமிழ்வழியில் கல்வி பயின்றவர்கள் மட்டுமே 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம் மற்றும் அச்சட்டத்திற்கான 2020-ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்பட தகுதியுடையவர்கள் ஆவர்.

(ii) இதர மொழிகளை பயிற்று மொழியாக (Medium of instruction) கொண்டு பயின்று, தேர்வுகளை மட்டும் தமிழில் எழுதியவர்கள், இம்முன்னுரிமை ஒதுக்கீட்டிற்கு தகுதியுடையவர்கள் அல்லர்.

(iii) ஒன்றாம் வகுப்பில் பள்ளியில் சேராமல், வயதின் அடிப்படையில் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் 2 முதல் 8 வரையிலான வகுப்புகளில் நேரடியாக பள்ளிகளில் சேர்ந்து, தமிழ்மொழியினைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று தேர்ச்சி பெற்றவர்களும், பிற மாநிலங்களில் தமிழ்மொழியினைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயின்று, பின்னர் தமிழ் நாட்டில் தங்களது கல்வியினை, சேரும் வகுப்பிலிருந்து தொடர்ந்து தமிழ் வழியில் பயின்றவர்களும் மேற்படி முன்னுரிமை வழங்கப்படத் தகுதியுடையவர்கள் ஆவர். நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி வரை அவர்கள் பயின்ற சம்பந்தப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களிலிருந்தும் தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களைப் பெற வேண்டும். அதாவது, பள்ளிக் கல்வியைப் பொறுத்தமட்டில், சம்பந்தப்பட்ட தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் வழங்கும் சான்றிதழ்களின் அடிப்படையிலும், உயர்கல்வியைப் பொறுத்தமட்டில் தொழிற்பயிற்சி நிலையம் / கல்லூரி / பல்கலைக்கழக முதல்வர் / பதிவாளர் வழங்கும் சான்றிதழ்களின் அடிப்படையிலும் முன்னுரிமை அளிக்கப்படும். மேற்படி சான்றிதழ்கள் பணியில் உள்ள அலுவலர்களால் மட்டும் அளிக்கப்படவேண்டும் எனவும், ஓய்வுபெற்ற அலுவலர்களால் அளிக்கப்படக்கூடாது எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

(iv) பள்ளிக்குச் செல்லாமல் நேரடியாக தனித்தேர்வர்களாக தமிழ் வழியில் தேர்வெழுதி தேர்ச்சி பெற்றவர்கள் மேற்படி முன்னுரிமை வழங்கப்படத் தகுதியுடையவர்கள் அல்லர்.

(v) பள்ளிக்குச் சென்று பள்ளியில் பத்தாம் வகுப்பு, பதினொன்றாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு போன்ற பொதுத்தேர்வுகள் எழுதி, அதில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்களில் தேர்ச்சி பெறாமல், தனித்தேர்வராக தேர்வெழுதி அப்பாடங்களில் தேர்ச்சி பெற்று, தொடர்ந்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் தமிழ் வழியில் படித்து தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மேற்படி முன்னுரிமை வழங்கப்படத் தகுதியுடையவர்கள் ஆவர். நிர்ணயிக்கப்பட்ட கல்வித் தகுதி வரை அவர்கள் பயின்ற சம்பந்தப்பட்ட அனைத்து கல்வி நிலையங்களிலிருந்தும் தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களைப் பெற வேண்டும். அதாவது, பள்ளிக் கல்வியைப் பொறுத்தமட்டில், சம்பந்தப்பட்ட தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் மற்றும் தனித்தேர்வைப் பொறுத்தமட்டில் இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம் வழங்கும் சான்றிதழ்களின் அடிப்படையிலும், உயர்கல்வியைப் பொறுத்தமட்டில் தொழிற்பயிற்சி நிலையம் / கல்லூரி / பல்கலைக்கழக முதல்வர் / பதிவாளர் வழங்கும் சான்றிதழ்களின் அடிப்படையிலும் முன்னுரிமை அளிக்கப்படும்.

(vi) கல்வித் தகுதிச் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) மற்றும் மதிப்பெண் பட்டியல் ஆகியவற்றின் மூலம் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்கள் என்பதை சம்பந்தப்பட்ட பணியாளர் தெரிவு முகமைகள் (Recruiting Agencies) / பணிநியமன அலுவலர்கள் (Appointing Authorities) உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(vii) விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்படும், தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களின் உண்மைத்தன்மையினை சம்பந்தப்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகள் மூலம் பணியாளர் தெரிவு முகமைகள் (Recruiting Agencies) / பணிநியமன அலுவலர்கள் (Appointing Authorities) உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(viii) தேர்வர்கள் மேற்குறிப்பிட்ட வழிமுறைகளின் மூலம் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்கள் என்பதை உறுதி செய்ய இயலாத நிலையில், தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களை, இணைப்புகள்-I மற்றும் II-ல் உள்ள படிவங்களில் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களிடமிருந்து பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

(ix) பள்ளிகள் மூடப்பட்ட நிகழ்வுகளில், சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலர் / உரிய அலுவலரிடமிருந்தும், கல்லூரிகள் மூடப்பட்ட நிகழ்வுகளில், அக்கல்லூரிகள் ஏற்கனவே இணைவு பெற்றிருந்த பல்கலைக்கழகப் பதிவாளரிடமிருந்தும், தமிழ் வழியில் கல்வி பயின்றதற்கான சான்றிதழ்களை தேர்வர்கள் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

(x) தொடக்க நிலை (ஐந்தாம் வகுப்பு), உயர்நிலை (பத்தாம் வகுப்பு), மேல்நிலை வகுப்பு (பன்னிரண்டாம் வகுப்பு), பட்டயம் (Diploma), இளங்கலைப் பட்டம் மற்றும் முதுகலைப் பட்டம் ஆகிய கல்வித் தகுதிச் சான்றிதழ்கள் / மதிப்பெண் பட்டியல்கள் மற்றும் மாற்றுச் சான்றிதழ்களில் (Transfer Certificate) மாணவர்களின் பயிற்று மொழி (தமிழ் / ஆங்கிலம் / இதர மொழிகள்) கட்டாயம் குறிப்பிடப்படும். [இது தொடர்பாக தேவையான வழிகாட்டு நெறிமுறைகள் பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வித் துறைகளால் வெளியிடப்படும்].

(xi) தமிழ் இலக்கியத்தில் கல்வித் தகுதி பெற்றவர்களை மட்டுமே பள்ளி மற்றும் கல்லூரிகளில் தமிழ் பாடத்திற்கான ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும்; மற்றும் தமிழ் பாடத்திலும், மாறுபட்ட வேறு ஒரு பாடத்திலும் (Cross Major Subject Degree in Tamil) பட்டம் பெற்றவர்களை தமிழ் ஆசிரியர்களாக பணி நியமனம் செய்யக் கூடாது என்பதற்கான திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வித் துறைகள் நடவடிக்கை மேற்கொள்ளும்.

. . .4...

(xii) மேற்படி சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ள 20 விழுக்காடு முன்னுரிமை ஒதுக்கீடானது, நேரடி பணி நியமனத்திற்கான ஒவ்வொரு தெரிவு நிலையிலும் (முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வு மற்றும் இதர நிலைகள்) பதவி வாரியாக பின்பற்றப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நா. முருகானந்தம்,**
**தலைமைச் செயலாளர்.**

பெறுநர்

அனைத்து அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் / அரசு முதன்மைச் செயலாளர்கள் / அரசுச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை-600009.
அனைத்து தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-600009.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
அனைத்து துறைத் தலைவர்கள், (தலைமைச் செயலக துறைகள் வழியாக).
பதிவாளர், அனைத்து பல்கலைக் கழகங்கள் ( உயர்கல்வித் துறை வழியாக).
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை / மதுரைக் கிளை.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 003.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், கல்லூரி சாலை, சென்னை-600 006.
தலைவர், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை- 600 018.
தலைவர், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், சென்னை-600 008.
இயக்குநர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, சென்னை-600 032.
உறுப்பினர் செயலர், தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வு குழுமம், சென்னை-600015.
தேசிய தகவலியல் மையம், தலைமைச் செயலகம், சென்னை -600 009. (மேற்படி அரசாணையை தமிழக அரசு வலைத்தளம் http://www.tn.gov.in-ல் வெளியிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.)

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்-II, முதலமைச்சர் அலுவலகம், சென்னை- 600 009.
மாண்புமிகு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதன்மைத் தனிச்செயலர், சென்னை –600009.
மனிதவள மேலாண்மைத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், சென்னை –600009.
மனிதவள மேலாண்மை (நி.சீ)த்துறை, சென்னை –600009.
அனைத்து அலுவலர்கள் / பிரிவுகள், மனிதவள மேலாண்மைத்துறை, சென்னை –600009.
(கோ.எண்.4038412/எஸ்.2/2023)
இ.கோ. / உபரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
16.04.2025
16/4/25

**இணைப்பு - I**

(அரசாணை (நிலை) எண். 16, மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள் 15.04.2025)

**தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழ்***

திரு / திருமதி / செல்வி ______ ________ (பெயர்) _____ வகுப்பு முதல் ____________ வகுப்பு வரை **தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு** ________ ஆண்டு முதல் _______ ஆண்டு வரை, இப்பள்ளியில் / தனித்தேர்வர் முறையில் படித்தார் எனவும், மேற்குறிப்பிட்ட வகுப்புகளுக்கான படிப்பினை திருப்திகரமாக நிறைவு செய்தார் எனவும் சான்றளிக்கப்படுகிறது.

திரு / திருமதி / செல்வி ______________ (பெயர்) அவர்களுக்கு **தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக வழங்கப்படும் கல்வி உதவித் தொகை** வழங்கப்பட்டது / வழங்கப்படவில்லை.

2020-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டம், பிரிவு 2(d)-ன் கீழ், ஆதார ஆவணங்களை சரிபார்த்ததன் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வுள்ளடக்கங்களின் உண்மைத் தன்மைக்கு இச்சான்றிதழில் கையொப்பமிட்டுள்ளவர் முழுப்பொறுப்புடையவர் ஆவார்.

கையொப்பம்
முதல்வர் / தலைமை ஆசிரியர் / மாவட்டக் கல்வி அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலர்/ இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம் / தகுதி வாய்ந்த அலுவலர்
**(அலைபேசி எண் _______ _______)**

இடம் :
நாள் :

கல்வி நிறுவனத்தின் அலுவலக முத்திரை

* தேர்வர் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு / பன்னிரண்டாம் வகுப்பு வரை வெவ்வெறு பள்ளிகளில் பயின்றுள்ளார் எனில், தான் பயின்ற ஒவ்வொரு பள்ளியிலும் தனித்தனியாக சான்றிதழைப் பெற வேண்டும்.

**Certificate for having studied in Tamil Medium***

This is to certify that Thiru / Tmt / Selvi ...................................... (Name) had studied Classes ......... to ........ with **Tamil as the medium of instruction, in this School / through Private Studies** during the year ........... to ........ and had satisfactorily completed the course of studies prescribed for Classes ........... to ...........

Thiru / Tmt / Selvi .............................. (Name) was / was not awarded **scholarship meant for students studying in the Tamil medium.**

This certificate is issued with reference to Section 2(d) of the PSTM (Amendment) Act, 2020, based on the verifiable documentary evidence. The undersigned assumes full responsibility for the veracity of the contents herein.

Signature of Principal / Head Master / District Educational Officer / Chief Educational Officer / Director, Directorate of Govt. Exams / Competent Authority
**(Mobile No ----------------------)**

Place :
Date :

Seal of the Institution

* If the candidate has studied in different schools from 1st std. upto 10th std. / 12th std., then the above certificates shall be obtained from each of the schools the candidates has studied in.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.
16-04-2025
16/4/25
2/6

**இணைப்பு - II**

(அரசாணை (நிலை) எண். 16 , மனிதவள மேலாண்மைத் (எஸ்) துறை, நாள் 15.04.2025)

**தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழ்***

திரு / திருமதி / செல்வி. ________________ (பெயர்)______ படிப்பினை (பட்டயம் / பட்டம் / முதுநிலை பட்டம் போன்றவை) தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு ______ ஆண்டு முதல் ______ ஆண்டு வரை, இந்நிறுவனத்தில் படித்தார் எனவும் அப்படிப்பினை ____________ (பட்டயம் / பட்டம் / முதுநிலை பட்டம் போன்றவை) திருப்திகரமாக நிறைவு செய்தார் எனவும் சான்றளிக்கப்படுகிறது.

திரு / திருமதி / செல்வி ____________________ (பெயர்) அவர்களுக்கு **தமிழ் வழியில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக வழங்கப்படும் கல்வி உதவித் தொகை** வழங்கப்பட்டது /வழங்கப்படவில்லை.

2020-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின் கீழ்வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் (திருத்தச்) சட்டம், பிரிவு 2(d)-ன் கீழ், ஆதார ஆவணங்களை சரிபார்த்ததன் அடிப்படையில் இச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இவ்வுள்ளடக்கங்களின் உண்மைத் தன்மைக்கு இச்சான்றிதழில் கையொப்பமிட்டுள்ளவர் முழுப்பொறுப்புடையவர் ஆவார்.

கையொப்பம்
முதல்வர் / பதிவாளர்
தொழிற்பயிற்சி நிலையம் /
கல்லூரி / பல்கலைக்கழகம்

இடம் :
நாள் :

கல்வி நிறுவனத்தின்
அலுவலக முத்திரை

**(அலைபேசி எண் ____________)**

* தேர்வர் வெவ்வேறான படிப்புகளை வெவ்வெறு நிறுவனங்களில் நிறைவு செய்துள்ளார் எனில், தான் படிப்பினை நிறைவு செய்த ஒவ்வொரு நிறுவனத்திலும் தனித்தனியாக இச்சான்றிதழைப் பெற வேண்டும்.

**Certificate for having studied in Tamil Medium***

This is to certify that Thiru / Tmt / Selvi .................................... (Name) had studied .................... (Diploma / Degree / PG Degree, etc.) during the year .......... to ....... with **Tamil as the medium of instruction** and had satisfactorily completed the course of studies prescribed for ....................... (Diploma / Degree / PG Degree, etc.)

Thiru / Tmt / Selvi ............................ (Name) was / was not awarded **scholarship meant for students studying in the Tamil medium.**

This certificate is issued with reference to Section 2(d) of the PSTM (Amendment) Act, 2020, based on the verifiable documentary evidence. The undersigned assumes full responsibility for the veracity of the contents herein.

Signature
Principal /Registrar
Industrial Training Institute /
College / University

Place :
Date :

Seal of the Institution

**(Mobile No. ______________)**

* If the candidate has completed different courses in different Institutions, such a certificate shall be obtained from each of these Institutions for the courses completed therein.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.
16-04-2025
16/4/25

6